8th September 1970]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : உதகையைப் பொறுத்த வரையில், என்னிடத்தில் விவரம் இல்லை. தாளவாடி பகுதி, ஓசூர் பகுதிகளில் நாம் பட்டு உற்பத்தி செய்வதற்குத் தேவையான செடிகளை வளர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள்வதற்காக அங்குள்ள மக்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பண உதவி செய்வதற்கு அரசாங்கம் முடிவெடுத்து வருகிறது.

Industrial Estate

*86. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Experts Committee visited Ariyalur on 17-4-1970 to explore the possibilities of establishing an industrial estate there; and

(*b*) if so, the details thereof ?

தொழிற்பேட்டை

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 17-4-1970-ல் அரியலூரில் தொழிற்பேட்டை ஏற்படுத்துவது சம்பந்தமாக ஆராய நிபுணர் குழு சென்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ)வும் (இ)யும் : இந்திய அரசினால் அமைக்கப்பட்ட சிறுதொழில் பணி நிறுவனத்தின் வல்லுநர் குழு 1970 ஏப்ரல் திங்களில் அரியலூரில் தொழிற்பேட்டை தொடங்க ஆய்வு நடத்தியது. இப்பணி நிறுவனத்தின் ஆய்வு அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

Thiruvalluvar temple

*89. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there is any proposal to renovate the Thiruvalluvar temple in Mylapore ?

திருவள்ளுவர் கோவில்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் கோயிலைப் புதுப்பிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இக்கோவிலின் மேற்கு பக்கத்திலுள்ள உள்ள சுற்றுப்புறச் சுவர், விமானங்கள் தவிர, கோவில் கட்டிடங்கள் பொதுவாக நல்ல நிலையிலேயே உள்ளன. சுற்றுப்புறச் சுவர்கள், கல்யாண மண்டபம் ஆகியவை கட்டுவதற்கான திட்டங்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளன. சுற்றுப்புறச் சுவர்கள் கட்டப்பட்டு கல்யாண மண்டபம் குறித்த பணி பாதி நிறை

வேற்றப்பட்டுள்ளது. கல்யாண மண்டபம் கட்டும் பணியை விரைவில் முடிப்பதற்காக மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு, அவசிய மானால் புதுத் திருப்பணிக் குழு ஒன்றை அமைக்குமாறு இந்து சமய அறக் கட்டளை ஆணையாளர், சென்னையிலுள்ள உதவி ஆணையாளருக்குக் கட்டளை இட்டுள்ளார்.

Housing Schemes

*90. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that the Government have sent a proposal on housing to the Government of India under revolving fund scheme ;

(*b*) if so, the salient features of the scheme ;

(*c*) whether any reply has been received from the Government of India ; and

(*d*) if so, the details thereof ?

வீட்டு வசதித் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இவ்வரசு சுழல் நிதித் திட்டத்தின்கீழ் வீட்டு வசதித் திட்டம் எதையேனும் இந்திய அரசுக்கு அனுப்பியது உண்மையா ?

(இ) ஆமெனில் இத்திட்டத்தின் மிக முக்கியமான கூறுகள் யாவை ?

(உ) இந்திய அரசிடமிருந்து பதில் ஏதேனும் கிடைத்துள்ளதா ?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) ரூ. 957 லட்சத்தில் 2000 ஏக்கர் நிலத்தை கையகப் படுத்தி மேம்படுத்துவதற்கான திட்டத்தையும் 5000 வீடுகளை நான்கு வருடங்களில் ரூ. 1268.50 லட்ச மதிப்பீட்டில் கட்டுவதற்கான திட்டத்தையும் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்த இரண்டு திட்டங்களுக்கும் ரூ. 428.40 லட்சம் நடப்பாண்டிற்கு (1970-71) தேவைப்படும்.

(உ)வும் (எ)யும் : நிதிப் பற்றுக்குறையின் காரணமாக மாநில அரசுகளின் எல்லாத் திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க இயலாது என்றும் ஆகையால் ஏற்கெனவே அனுப்பிய திட்டத்தைத் திருத்தி எந்தத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அந்தத் திட்டங்களை வரிசைப்படுத்தி அனுப்பும்படி மத்திய அரசு கேட்டுள்ளது. திருத்திய செயற்குறிப்பை தமிழ் நாடு அரசு, வீட்டு வசதி வாரியத் தலைவருடன் கலந்தாலோசித்து தயாரித்துக் கொண்டிருக்கிறது. அது பரிசீலனை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு விரைவில் அனுப்பப்படும்.